Visit QB365-SLMS - https://www.qb365.in/slms/ Complete Questions and Answers

Questions:

அனைத்து வினாக்களுக்கும் விடையளி

1.தமிழ்நாட்டின் பெருங்கற்கால அகழ்வாய்விடங்களைப் பற்றி விவாதிக்க.

அனைத்து வினாக்களுக்கும் விடையளி

2.தொடக்ககால வேதகாலத்தின் புவியியல் பரவல்களைப் பட்டியலிடுக.

3.மேய்ச்சல் சமூகத்தின் இயல்புகளை ஆய்க.

4.தொடக்க வேதகால சமூகத்திற்கும் பின் வேதகால சமூகத்திற்கும் இடையிலுள்ள வேறுபாடுகளைக் காட்டுக.

அனைத்து வினாக்களுக்கும் விடையளி

5.வேதகால இலக்கியங்களை வரிசைப்படுத்தவும்.

6.ஜென்ட் அவஸ்தாவைப் பற்றி எழுதுக.

7.தொடக்க வேதகாலத்தில் பெண்களின் நிலையைக் கோடிட்டுக்காட்டுக

அனைத்து வினாக்களுக்கும் விடையளி

8.வேதப்பாடல்களின் முக்கிய தொகுப்பின் பெயர்

(a) பிராமணங்கள் (b) சங்கிதைகள் (c) ஆரண்யகங்கள் (d) உபநிடதங்கள்

9.மேல் கங்கைச்சமவெளிப் பகுதி எவ்வாறு அழைக்கப்படுகிறது?

(a) குருபாஞ்சாலம் (b) கங்கைச்சமவெளி (c) சிந்துவெளி (d) விதேகா

10.ஆதிச்சநல்லூர் _____ மாவட்டத்தில் அமைத்துள்ளது

(a) கோயம்புத்தூர் (b) திருநெல்வெலி (c) தூத்துக்குடி (d) வேலூர்

11.கீழ்காணும் இணைகளை கவனிக்கவும்.

(i) சேனானி	படைத்தளபதி
(ii) கிராமணி	கிராமத்தலைவர்
(iii) பாலி	தன்னார்வத்தால் கொடுக்கப்பட்டது
(iv) புரோகிதர்	ஆளுநர்

மேற்கண்டவற்றில் எந்த இணை தவறானது?

(a) i (b) ii (c) iii (d) iv

12.கூற்று (கூ); முற்கால வேதகாலத்தில் குழந்தைத் திருமணம் இருந்ததற்கான சான்றுகள் இல்லை .
காரணம் (கா); பின் வேதகாலத்தில் பெண்கள் சடங்குகளிலிருந்து விலக்கி வைக்கப்பட்டனர்.

(a) கூற்றும் காரணமும் சரியானவை . காரணம் கூற்றை விளக்குகிறது (b) கூற்றும் காரணமும் சரியானவை . ஆனால் காரணம் கூற்றை விளக்கவில்லை
(c) கூற்று சரியானது. காரணம் தவறானது (d) கூற்று, காரணம் இரண்டும் சரியானவை .